STC.No.398/2021 நாள் 22.09.2023

P.W.1 திரு.சண்முகம்

சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :

1. நான் ஸ்ரீ சீனிவாசா பேஷன் என்ற நிறுவனத்தின் தனிநபர் உரிமையாளர் என்றால் சரிதான் எனது நிறுவனத்தில் எம்பிராய்டரி டிசைன் தொழில் தான் செய்கிறேன். எம்பிராய்டரி வேலையானது Job Work ஆக கூலிக்கு செய்து வருகிறேன் என்றால் சரிதான். எதிரி நிறுவனம் மட்டுமல்லாமல் திருப்பூரில் உள்ள மற்ற நிறுவனங்களுக்கும் Job Work செய்து வருகிறேன் என்றால் சரிதான். ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் இந்த Job Work செய்து கொண்டிக்கிறேன் என்றால் எங்களை அணுகுபவர்களுக்கு கொட்டேசன் கொடுப்போம், அதில் அவர்கள் கையொப்பம் செய்து உறுதி செய்வார்கள், அதன் அடிப்படையில் நாங்கள் வேலை பார்த்து கொடுப்போம், 30 நாட்கள் தவணையில் அவர்கள் பணத்தை செலுத்துவார்கள். அனைவருக்குமே மேற்கண்ட முறையில் தான் Job Work செய்வோமா என்றால் இல்லை, ஒரு ஒரு நிறுவனத்திற்கும் மாறுபடும். எதிரியின் நிறுவனமாக CBC பேசன் ஆசியா என்ற நிறுவனத்திற்கு 3 வருடமாக வேலை செய்து வருகிறேன்.

2. நான் 3 வருடம் எதிரியுடன் பரிவர்த்தனை செய்ததற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 3 வருடங்களில் அவர்கள் நிறைய வேலைக்கு அணுகினார்கள், ஆனால் எங்களால் இரண்டு வேலைக்கு மட்டுமே எனக்கு விலை கட்டுபடி ஆனதால் அதை மட்டுமே செய்தேன். அந்த Invoice யை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள இரண்டு Invoice களுக்கு மட்டுமே வேலை செய்துள்ளேன். இதை தவிர வேறு எந்த Invoice களுக்கும் எதிரிக்கு வேலை செய்யவில்லை. CBC பேசன் ஆசியா பிரவேட் லிமிடெட் நிறுவனத்தின் உரிமைளார் யார் என்றால் விஜயகுமார் ஆவார். விஜயகுமாரை தவிர வேறு யாரும் உரிமையாளர் இல்லை என்றால் எனக்கு தெரியாது. அந்தநிறுவனத்தில் GST, PAN எண்கள் விஜயகுமாரின் பெயரில் தான் இருந்தது. அவர் மட்டுமே என்னை தொழில் ரீதியாக

என்னை அனுகினார், வேறு யாரும் என்னை அனுகவில்லை.

3. நான் தாக்கல் செய்துள்ள Invoice களில் முதல் Invoice ல் Butterfly எம்பிராய்டரி டிசைன் செய்து கொடுத்தேன். 1ம் எதிரி என்னிடம் மேற்படி டிசைன் தொழில் பேசும்போது கொட்டேசன் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் கொடுத்த கொட்டேசனில் ஒரு பீசிற்கு 18 ரூபாய் கூலி நிர்ணையம் செய்து கொடுத்து இருந்தேன். நான் கொடுத்த கொட்டேசனை எதிரி உறுதி செய்து கையொப்பம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி கொட்டேசன் தேதி என்ன என்றால் ஞாபகம் இல்லை. ஆடருக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாக கொடுத்து இருப்போம். நான் கொடுத்த கொட்டேசனை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 09.03.2021 ஆம் தேதி Invoice க்கு கொட்டேசன் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மேற்படி கொட்டேசன் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. நான் கொடுத்த கொட்டேசனை எதிரி உறுதி செய்து கையொப்பம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான்.நான் கொடுத்த கொட்டேசனை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. கொட்டேசன் கொடுத்த தேதியிலிருந்து எத்தனை நாட்களில் வேலை முடித்து கொடுப்போம் என்றால் பீஸ் கொடுத்த 10 நாட்களுக்கு முடித்து கொடுக்க சொல்வர்கள், நாங்கள் அவர்கள் சொன்ன நாட்களுக்குள் முடித்து கொடுத்துவிடுவோம். அதற்கு எழுத்து பூர்வமான ஆவணம் எதுவும் ஏற்படுத்திக்கொள்வோமா என்றால் இல்லை. முதல் Invoice ல் எத்தனை பீஸ்களுக்கு வேலை செய்து கொடுத்தேன் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. இரண்டவாது Invoice ல் எத்தனை பீஸ்களுக்கு வேலை செய்து கொடுத்தேன் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. இரண்டு Invoice களும் எனது கம்பெனி தயார் செய்த ஆவணம் தான். இரண்டு Invoice களிலும் உள்ள கையொப்பம் என்னுடையது தான். உண்மையில் எதிரி நிறுவனம் எனக்கு எந்தவித Job Work கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

5. உண்மையில் எதிரி எனக்கு Job Work கொடுத்திருந்தால் அவரால் உறுதி செய்த கொட்டேசனை இந்த வழக்கில் தாக்கல் செய்து இருப்பேன் என்றாலும், அவ்வாறு தாக்கல் செய்யததால் நான் சொல்லியபடி வேலை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய Invoice ல் நான் கட்டிய Gst தொகையை எதிரி நிறுவனம் அடுத்த

மாதம் வசூல் செய்துவிட்டார். மேலும் நான் எனது Invoice தொகைக்கு TDS தொகையை பிடித்தம் செய்து கட்டியுள்ளேன். நான் எனக்கு கொடுக்கப்பட்ட எம்பிராய்டரி வேலையை முடித்து பீஸ்களை எதிரி நிறுவனத்திற்கு Delivery Note உடன் பில்லை சேர்த்து அனுப்பி வைத்தேன். எந்த தேதியில் Delivery போடப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. எதிரி நிறுவனத்திற்கு அனுப்பும்போது E–way Bill போட்டேனா என்றால் இல்லை. பொதுவாக Delivery Note கொடுப்பது தான் வழக்கம். பொதுவாக ஒரு நிறுவனத்திலிருந்து மற்றொரு நிறுவனத்திற்கு GST Invoice மூலமாக சரக்கு செல்லும்போது E–way Bill கட்டாயம் போடவேண்டும் என்றால் சரிதான்.

6. திருப்பூர் மாவட்டத்திற்குள் சரக்குகளை Delivery செய்யும் போது பொதுவாக E–way Bill நாங்கள் போடுவது கிடையாது. E–way Bill இல்லாமல் சரக்குகளை எடுத்து சென்றால் Sales Tax Officer விசாரணையில் பிடித்தார்கள் என்றால் அபராத தொகை கட்டவேண்டும் என்றால் சரிதான். நான் எந்த பொருளையும் விற்பனை செய்யவில்லை. Job Work மட்டுமே செய்கிறோம். அதனால் எங்களுக்கு தேவையில்லை. Delivery Challan யை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. முதல் Invoice தொகை ரூ.4,70,635/– இரண்டாவது Invoice தொகை ரூ.4,55,538/– ஆகும். மொத்த நிலுவை தொகை ரூ.9,26,173/– ஆகும். பின்பு 13.11.2020 ம் தேதி எதிரி நிறுவனம் எனக்கு ரூ.2 இலட்சம் NEFT மூலம் எனக்கு செலுத்தியுள்ளார்கள். அதற்கான வங்கி பரிவர்த்தனை ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். மீத நிலுவை தொகைக்கு வழக்கு காசோலைகள் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

7. 03.02.2021 ஆம் தேதி காசோலை எண்.2279 எண்ணுள்ள ரூ.4,66,153/– தொகைக்கும், மற்றொரு காசோலை எண்.265891 எண்ணுள்ள ரூ.2,50,000/– தொகைக்கும் இரண்டு காசோலைகளையும் எதிரி நிறுவனத்தின் Accounts Department யை சேர்ந்த ஒரு நபர் என்னிடம் கொடுத்தார். எங்கு வைத்து கொடுத்தார் என்றால் பழவஞ்சிபாளையம் ரிங் ரோட்டில் உள்ள எதிரியின் தலைமை அலுவலகத்தில் வைத்து கொடுத்தார். இரண்டு காசோலைகளையும் Accounts Department ல் உள்ள ஒரு நபர் பூர்த்தி செய்து என்னிடம் கொடுத்தார் என்றால் சரிதான். மீத தொகையான ரூ.7,26,173/– தொகைக்கு இரண்டு காசோலைகளை பூர்த்தி செய்து ஒரே நபர் கொடுத்தார் என்றால் சரிதான். இரண்டு காசோலைகளின் தொகையும் சேர்த்தால்

ரூ.7,16,153/— தொகை தான் வருகிறது என்றாலும், மீத தொகையான ரூ.10,560/— வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி ரூ.10,560/— தொகை TDS ல் செலுத்திவிட்டார். மேற்படி விபரத்தை புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. TDS பிடித்தம் செய்ததற்கான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

8. என்னிடம் காண்பிக்கப்படும் இரண்டு காசோலைகளிலும் பூர்த்தி செய்துள்ள கையெழுத்துக்கள் வேறுபாட்டு உள்ளது என்றால் சரிதான். ஒரே நேரத்தில் ஒரு நபர் பூர்த்தி செய்து கொடுத்திருந்தால் இரண்டு காசோலைகளிலும் ஒரே மாதிரி கையெழுத்துக்கள் இருக்கும் என்றால் சரிதான். நான் காசோலையை கையொப்பம் செய்த இடத்தை பார்த்தேன், இரண்டும் ஒன்றாக உரிமையாளரின் கையொப்பம் இருந்தது அதனால் நான் பெற்றுக்கொண்டு வந்துவிட்டேன். ஒரே நபர் பூர்த்தி செய்து கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டு Invoice களுக்கும் முறையாக 2019, 2020 ஆண்டில் GST செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். GST கணக்கு விபரங்களை வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். இரண்டு காசோலைகளை வங்கியில் 03.02.2021 ம் தேதி காலை 12.00 மணியளவில் பணமாக்க வங்கியில் தாக்கல் செய்தேன். வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி நிறுவனம் எனக்கு எந்த வேலையும் கொடுக்கவில்லை என்றாலும், எதிரி நிறுவனத்தை பற்றி எனக்கு முழுமையாக தெரியாது என்றாலும் சரியல்ல. எதிரி எனக்கு கொடுக்கப்படவேண்டிய சட்டப்படியான நிலுவை தொகை எதுவும்இல்லை என்றாலும் சரியல்ல. சரியாக வியாபாரம் செய்து இருந்தால் GST, Delivery Challan, Job Order, ஒப்பந்தகள் போன்றவற்றை இந்த வழக்கில் தாக்கல் செய்து இருப்பேன் என்றால் சரியல்ல. பணம் பட்டுவாட செய்யும்போது மேற்படி ஆவணங்களை பெற்றுக்கொண்டு காசோலைகளை கொடுப்பார்கள்.

9. உரிய முறையில் நிறுவனத்தை நடத்தி இருந்தால் வங்கி மூலமாக பரிவர்த்தனை செய்து இருப்பேன் என்றாலும், ரொக்க கடன் பரிவர்த்தனையாக செய்து இருக்க மாட்டேன் என்றாலும் சரியல்ல, நான் செய்யும் வியாபாரம் அனைத்தும் வங்கி

பரிவர்த்தனை மூலமாக தான் செய்கிறேன், பெயர் அளவிற்கு ரொக்க கடன் என்று போடப்பட்டுள்ளது. GST அலுவலகத்திலிருந்து ஆவணங்களை அழைத்து வழக்கை நிருபிக்க தயாராக உள்ளேன். இவ்வழக்கு பொய்யான வழக்கு என்றாலும், எதிரி விடுதலை செய்யதக்கதவர் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.09.22 20:19:23 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.